**உக்குவெல பிரதேச சபையி - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உக்குவெல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உக்குவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொத்தம் ரூபா 156,700 பெறுமதியான தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் முன்னைய ஆண்டில் கணக்கீடு செய்யாமையால் ஏற்பட்ட தவறினை திருத்தம் செய்வதற்காக மீளாய்வாண்டின் வருமானத்திலிருந்து பங்களிப்புக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தன. | 2025 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் நிர்மாண பழுதுபார்ப்பு மற்றும் கணினி முறைமைகளுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா. 2,401,896 மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் மொத்தம் ரூபா. 1,450,000 பெறுமதியான 02 அபிவிருத்தித் திட்டங்கள் ஒப்பந்தங்களில் ஈடுபடாமல் கடன் கொடுத்தோரின் கீழ் பதிவு செய்யப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட எழுதுபொருள் களஞ்சிய உப பதிவேட்டில் ஒவ்வொரு பொருளிலும் ரூபா 186,526 ஆன மீதியொன்று குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.6.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகையான ரூபா 560,776 ஆதனக் கடன் வட்டி மீதி தொடர்பான ஆவணங்கள், அட்டவணைகள், மற்றும் கோப்புகளை சமர்ப்பிக்காததால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை. | இது தொடர்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டு, தேவையான ஆலோசணை களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், அட்டவணைகள் மற்றும் கோப்புகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| (i) **1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு** | வீதவரி ஆதனங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பிடப்பட்டு வீதவரி விதிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு காலம் முடிவதற்குள் நாங்கள் சொத்துக்களின் மதிப்பீட்டை செய்து தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரியுள்ளதாக. | வீதவரி ஆதனங்கள் 5 வருடங் களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பிரகாரம் வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ii) **1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்** | நாளாந்த சம்பளம் பெறும் செயற்பாடுகளில் பணிபுரியும் 7 ஊழியர்களுக்கான, ஊழியரின் மொத்த சம்பளத்தில் 8 சதவீதத்திற்கும், தொழில் வழங்குனரின் 12 சதவீதத்திற்கும் சமமான ரூபா 536,156 பங்களிப்புகள் நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | ஊழியர் சேமலாப நிதியத்தை எதிர்காலத்தில் இந்த நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புகள் தாமதமின்றி தொடர்புடைய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (iii) **1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர்** | நாளாந்த சம்பளம் பெறும் செயற்பாடுகளில் பணிபுரியும் | பங்களிப்புத் தொகையை | ஊழியர் நம்பிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | **நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம்** | 7 ஊழியர்களுக்கான, 3 சதவீத பங்களிப்பு தொகை ரூபா 80,423 தொகை நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இந்த நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | பொறுப்பு நிதியத்திற்கு தாமதமின்றி செலவு வைக்கப்பட வேண்டும். |
| **(iv)** | **1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்** | | | |
| | பிரிவுகள் 126 மற்றும் 127 | ரூபா 7,680,000 பெறுமதியான பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள் 42 மயானங்கள் மற்றும் 21 காணிள் கையேற்க்கப்பட்ட கையேற்கபப்படவில்லை. | தற்போது 02 மயானங்கள் சபையால் கையேற்கப்பட்டுள்ளன. | சொத்துக்களின் உரிமையை சபையால் கையேற்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **சுற்றரிக்கை** | | | |
| | **2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| | 06 ஆம் பந்தி | புதிய மதிப்பீட்டைப் பெற்ற பிறகு புதிய வாடகை விகிதத்தை உள்ளடக்கிய ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியுமாக இருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட 03 புதிய மதிப்பீடுகளின் அடிப்படையில் 11 கடைகளின் ஒப்பந்தங்கள் திருத்தம் செய்யப்படவில்லை. | திருத்தப்பட்ட மதிப்பீட்டைக் கோரி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வேண்டுகோள அனுப்பப்பட்டுள்ளது. | திருத்தப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்று புதிய குத்தகை வாடகைக்யை சேர்க்ககூடிய வகையில் ஒப்பந்தங்கள் திருத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 38,728,386 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 14,736,339 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,399,000 | 3,719,090 | 3,670,859 | 303,426 | 901,000 | 3,294,310 | 3,481,877 | 255,196 |
| (ii) | வாடகை | 5,570,000 | 6,598,090 | 6,596,930 | 37,500 | 1,300,000 | 4,483,819 | 4,915,356 | 36,340 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,875,000 | 2,592,542 | 2,592,542 | - | 120,000 | 2,394,924 | 2,394,924 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 59,089,500 | 62,413,747 | 61,731,585 | 3,262,708 | 4,500,000 | 44,369,568 | 43,368,585 | 2,580,546 |
| | | 70,933,500 | 75,323,469 | 74,591,916 | 3,603,634 | 6,821,000 | 54,542,621 | 54,160,742 | 2,872,082 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 303,427 ஆக இருந்தது அதில் ஒரு அலகிலிருந்து நிலுவை ரூபா 1,000 ஐ மிகைத்த 61 ஆதனங்களில் ரூபா 171,917 நிலுவையாக இருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 7,693,081 ஆக இருந்தது. அதில் 01 இற்கும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 2,009,505 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதி ரூபா 422,542 ஆக இருந்தது. | நீர் கட்டணங்கள் மற்றும் கைத்தொழில் கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அபிவிருத்தி செயற்திட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,330,026 தொகையில் 01 இற்கும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 450,000 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதி ரூபா 422,542 தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொதுச் சபை தீர்மானங்களுக்காக அதைச் சமர்ப்பித்து, கடன் கொடுத்தோர் பட்டியலிலிருந்து நீக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உக்குவெல பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 09 பதவிகளில் 12 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 11 மிகையும் காணப்பட்டன. | பதவிகளின் பதில் பணிகளைக் கவனித்தல் மற்றும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தராவும், நிலுவை வருமானத்தை அறவிடும் செயற்பாடுகளில் , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப் வேண்டிய ரூபா 477,195 கடன் நிலுவைத் தொகை, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்படவில்லை. | எதிர்காலத்தில் கடன் மீதிகளை பொறுப்பேற்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று. | கடன் மீதிகளை விரைவில் தீர்வு செய்யப்பட வேண்டும். |